


திருப்பூர் வடக்கு மாவட்டம் - அவிநாசி சட்டமன்ற தொகுதி ஒன்றிய - நகர - பேரூர் கழக பாகமுகவர்கள் (BLA-2) கூட்டம்

மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் MLA அறிவிப்பு

| நேரம் | கலந்து கொள்ளும் ஊராட்சி | நிகழ்விடம் |
|---|---|---|
| **திருமுருகன்பூண்டி ஒன்றியம் - நாள் : 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை** | | |
| காலை 10:00 மணி | வேலாயுதம்பாளையம் | அன்னபூர்ணா அருகில் |
| காலை 11:00 மணி | கணியாம்பூண்டி | சிவா தறிகுடோன் |
| காலை 12:00 மணி | தெக்கலூர், உப்பிலிபாளையம், வெள்ளாண்டிபாளையம். | ரைஸ்மில் வெள்ளாண்டிபாளையம். |
| மதியம் 03:00 மணி | நம்பியாம்பாளையம், வேட்டுவபாளையம். | விநாயகர் கோவில் நம்பியாம்பாளையம். |
| மதியம் 04:30மணி | கருவலூர், ராமநாதபுரதம். | கருவலூர் முன்னாள் தேர்தல் அலுவலகம். |
| **திருமுருகன்பூண்டி நகரம் - நாள் : 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை** | | |
| மாலை 06:00மணி | அம்மாபாளையம் | CSR திருமணமண்டபம் |
| மாலை 07:00மணி | திருமுருகன்பூண்டி | காமாட்சி அம்மன் திருமணமண்டபம் |
| **சேவூர் ஒன்றியம் - நாள் : 11.11.2024 திங்கள்கிழமை** | | |
| காலை 10:00 மணி | சேவூர், ஆலத்தூர், முறியாண்டம்பாளையம் | மணிநாயக்கர் வீடு, முறியாண்டம்பாளையம் ரோடு |
| காலை 11:30 மணி | தண்டுக்காரண்பாளையம், பொங்கலூர், கானூர், மங்கரசுவலையபாளையம். | CSR மஹால், சேவூர் |
| **சேவூர் ஒன்றியம் - நாள் : 18.11.2024 திங்கள்கிழமை** | | |
| காலை 10:00 மணி | பாப்பாங்குளம், புஞ்சை தாமரைக்குளம், வடுகபாளையம் | ஜோதிமுத்து மஹால், பாப்பாங்குளம் |
| காலை 11:00 மணி | புலிப்பார், போத்தம்பாளையம், தத்தனூர், குட்டகம். | அண்ணாமலை கார்டன், போத்தம்பாளையம் |
| **அவிநாசி ஒன்றியம் - நாள் : 11.11.2024 திங்கள்கிழமை** | | |
| மாலை 05:00 மணி | அய்யம்பாளையம், கருமாபாளையம், துலுக்கமுத்தூர், குப்பாண்டம்பாளையம், சின்னேரிபாளையம், நடுவச்சேரி. | சிவளாபுரி அம்மன் கோவில் அருகில் நடுவச்சேரி |
| மாலை 06:30 மணி | பழங்கரை | அய்யன் திருவள்ளுவர் மண்டபம் |
| **அன்னூர் வடக்கு ஒன்றியம் - நாள் : 14.11.2024 வியாழக்கிழமை** | | |
| காலை 10:00 மணி | கஞ்சப்பள்ளி, அல்லப்பாளையம். | மகேந்திரன் வீடு, கஞ்சப்பள்ளி. |
| காலை 11:00 மணி | அ.மேட்டுப்பாளையம், பசூர் | சுகுமார் வீடு, பசூர் |
| காலை 12:00 மணி | கணுவக்கரை, ஆம்போதி | சுப்பிரமணி தலைவர் வீடு, கணுவக்கரை. |
| மாலை 03:00 மணி | குப்பனூர், அ.செங்கப்பள்ளி | தினேஷ் வீடு, அ.செங்கப்பள்ளி. |
| மாலை 04:00 மணி | வடக்கலூர், மூக்கனூர். | விஷ்ணு மில், வடக்கலூர் |
| மாலை 05:00 மணி | ஒட்டர்பாளையம் | சுரேஷ் வீடு |
| மாலை 06:00 மணி | பொகளூர் | துரை வீடு |
| **அன்னூர் தெற்கு ஒன்றியம் - நாள் : 15.11.2024 வெள்ளிக்கிழமை** | | |
| காலை 09:00 மணி | வடவள்ளி, காரேகவுண்டன்பாளையம், கரியாம்பாளையம். | சண்முகம் தோட்டம், கெம்மநாயக்கன்பாளையம். |
| காலை 10:00 மணி | குப்பேபாளையம், காட்டம்பட்டி, மசக்கவுண்டன்செட்டிபாளையம், பிள்ளையப்பம்பாளையம், குன்னத்தூர். | தனபால் இல்லம், செம்மாணி செட்டிபாளையம். |
| காலை 11:00 மணி | பச்சாபாளையம், நாராணபுரம். | சக்திவேல் தோட்டம், ஆலம்பாளையம். |
| **அன்னூர் பேரூர் - நாள் : 15.11.2024 வெள்ளிக்கிழமை** | | |
| மாலை 06:00 மணி | நாகம்மாபுதூர் | பழனிச்சாமி வீடு |
| | குன்னத்தூராம்பாளையம் | லோகநாதன் வீடு |
| | சொக்கம்பாளையம் | பன்னீர் செல்வம் வீடு |
| | குமாரபாளையம் | KVS வீடு |
| | அன்னூர் | சரவணா வாட்டர் |

க.செல்வராஜ் எம்.எல்.ஏ.
திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்
திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்

தொண்டாமுத்தூர் ரவி
கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர்

டாக்டர். கோகுல் கிருபா சங்கர்
அவிநாசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்

திருப்பூர் வடக்கு - கோவை வடக்கு மாவட்ட தி.மு.க


# வென்று வென்று உயர்கவே !

பழங்காலத் தமிழ்மன்னர்
பாவலர்க்குப் பொன்பொருள்
வழங்காத நாளில்லை;
வரவேற்காப் பொழுதில்லை!
விழுங்காமல் வறுமையை
விரட்டியே அடிப்பதற்கு,
புழுங்காமல் வாழ்க்கையில்
புலவர்கள் மகிழ்வதற்கு
அழுங்காலம் இல்லாமல்
அகவாழ்வு மலர்வதற்கு

முழங்கொலி முரசமொடு
முடிபுனைந்து அரசாண்ட
கழலணி வேந்தர்கள்
கார்மழையாய் வரம்பின்றிப்
பொழிந்தவர்கள்;
அறிவுகந்த புரவலர்கள்;
நாட்டிலே
கொழித்தபொருள்
இரவலர்க்குக்
கொடைதந்த வள்ளல்கள்,
செழித்திருந்த தமிழ்நாட்டில்
செல்வத்துப் பயன்ஈதல்
வழிநடந்தார் கலைஞர்க்கு
வாயில்கள் திறந்துவைத்தார்;
வழிந்தோடும் காவிரிபோல்
வளமெலாம் ஈந்திருந்தார்!

வழுதியும் சேரனும்
வளவனும் தங்களின்
கொழுந்தென்று
குரிசிலென்று
குலபதி என்றேத்தி
வழுத்தியே மகிழ்ந்திருப்பர்!
வள்ளலாய் வாரிவாரி
வழங்குவதில் இவர்களின்
வரிசையை முந்திவிட்டீர்!

இமயமாய் உயர்ந்தவரே!
எழுகதிராய் ஒளிர்பவரே!



இமயத்தில் ஏற்றிவிட்டீர்;
எழில்வானில்ஆ தெரியவிட்டீர்!
சமயத்திற்கு ஏற்றபடி
தாளங்கள் போடுவோரைத்
உமியாகத் தள்ளிவிட்டு
ஓரமின்றி முடிவெடுத்துக்
கமழ்கின்ற கலைஞரின்
கவினுருவச் சிலையுடன்
செம்மொழித் தமிழ்விருதும்
சீராட்டும் அளித்தெமக்கு
இமயமே தந்துவிட்டீர்;
இருவிழி சிந்தவிட்டீர்!

இமைவிழியைக்
காப்பதுபோல்
இவ்வியக்கம் தமிழ்நாட்டை
இமைப்பொழுதும் நீங்காமல்
இராசராசன் போல்காப்பீர்!
சுமையென்று கருதாமல்
துவண்டுதான் போகாமல்
தமைவென்றீர்; தளபதியாய்த்
தலைவராய் ஓங்குகின்றீர்!
உமைவெல்ல இங்கொருவர்
உருவெடுத்து வந்தாலும்
குமைந்துதான்
குலைந்துதான்
குறுகித்தான் போய்விடுவார்!
நமநம அரிப்பாலே
நாடாள முடியுமா?

தமிழுக்குத் தொண்டாற்றும்
சான்றோரைப் புரப்பதில்
அமிழ்தூட்டும் தாயாக
ஆனவரே! என்றுமே
அமிழாத கடலாக,
அகலாத காற்றாக,
தமிழாக, இருளோட்டித்
தவழ்கின்ற ஒளியாக,
இமிழ்கடல்சூழ் தமிழ்நாட்டில்
என்றும்நீர் வாழுவீர்!
குமிழாக அல்ல,வளர்
கோலவான் ஞாயிறாய்!
நன்றியெனும் மூவெழுத்தில்
நவில்வதற்கு முடியாமல்
இன்றுதடு மாறுகின்றேன்;
இதயத்தின் குரலிங்கே
என்றுமே ஒலித்திருக்கும்;
இமயத்தில் உயர்ந்திருக்கும்!
ஒன்றுபோல் இசைத்திருக்கும்;
உள்ளத்தில் இணைந்தி ருக்கும்!
சென்றுவிட்ட செல்வம் இன்று
சேர்ந்ததுபோல்
நினைத்திருக்கும்!

நின்றெழுந்து நடந்தால்உம்
நிழலிலே தமிழ்நாடு
வென்றுவென்று
உயர்கவே;
விழியன்பு பொழிகவே!



பேராசிரியர்
**மா.செல்வராசன்**

ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில்

## பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்!

திருவள்ளூர். நவ.10

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் மற்றும் பள்ளிப்பட்டு பேரூராட்சி சார்பில் பி.எல்.ஏ 2 மற்றும் பி.எல்.சி. பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சி.ஜே சீனிவாசன் ஏற்பாட்டில் பேரூர் கழகச் செயலாளர் சி.ஜெ.செந்தில்குமார் ஏற்பாட்டில் பள்ளிப்பட்டு பகுதியில் நடைபெற்றது.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ். சந்திரன், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற தேர்தல் பணிகள் குறித்து மற்றும் பாக முகவர்கள் பாக பணி குழு உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இதில் அவைத் தலைவர் திருமலை லோகநாதன், பேரூராட்சி தலைவர் மணிமேகலை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், வழக்கறிஞர் பொன்னுசாமி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர் பன்னீர்செல்வம், மாவட்ட சிறுபான்மை அமைப்பாளர் ஜி.சித்திக் அலி, மாவட்ட தகவல் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் குமாரன், மாவட்ட பிரதிநிதிகள் குணசேகரன், செங்கையா, கவுன்சிலர்கள் சிரஞ்சீவி, ஜெகதீஷ், முரளி, முனிராத்தினம், ராமதாஸ், மற்றும் விஜயலூ, தண்டபாணி, இரவி, மனோகரன், எஸ்.எச்கலில், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர்கள் பாக முகவர்கள் வழக்கறிஞர்கள் பாக பணிக் குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நே.சிற்றரசு - தயாநிதிமாறன் -அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் முன்னிலை!

## ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் - பி.எல்.ஏ-2 கூட்டம்!

### தொகுதி பார்வையாளர் கௌதமன் பங்கேற்பு! மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, நவ.10-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி அனைத்து வட்ட கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ- 2 உறுப்பினர்கள் கூட்டம் நாளை (11-11-2024 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணி அளவில் எனது (பகுதி கழகச் செயலாளர் மா.பா. அன்புதுரை) தலைமையில் நுங்கம்பாக்கம் குளக்கரை சாலையில் அமைந்துள்ள மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் முன்னிலையில் தொகுதி பார்வையாளர் கௌதமன் ஆலோசனை வழங்குவார்.

இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் , அனைத்து வட்டக் கழக நிர்வாகிகள் பி.எல்.எ-2, (பாக தலைவர்) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள் : வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, கழக ஆக்க பணிகள்

இவ்வாறு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை தெரிவித்துள்ளார்.



உத்திரமேரூர் ஒன்றிய, பேரூர் தி.மு.க. பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் பூத் வாரியாக உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் சூர்யா வெற்றி கொண்டான் தலைமையில் நடைபெற்றது.இதில் பூத் வாரியாக ஆய்வு செய்து பாக முகவர்களிடம் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்,2026 சட்டமன்ற தேர்தலையொட்டி பாக முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர். உத்திரமேரூர் ஒன்றிய கழக செயளாலர் ஒன்றிய குழு உறுப்பினருமான கெ.ஞானசேகரன் முன்னிலையில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூர் கழக செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் பேரூராட்சி தலைவர் பொ.சசிகுமார், மாவட்ட பிரதிநிதி கோவிந்தராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பெ.மணி, அவைத்தலைவர் சுப்புராயன் ஒன்றிய கவுன்சிலர்கள் சுகுணா சுந்தர்ராஜன் ,தயாளன் (எ) ருத்திரகோட்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..